# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03–ம் நாள் செவ்வாயக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **சங்கையா** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**03.02.2026** **OS.11/2020** **பி.வா.சா.2 சங்கையா**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் தகவல் சொன்னது என்றால் நாங்கள் தான் சொன்னோம். நாங்கள் என்று குறிப்பிடுவது யார் என்றால் எங்கள் பங்காளிகள் ஆவோம். நானும் எங்கள் பங்காளிகளும் பிரமனூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறோமா என்றால் நான் மட்டும் தான் பிரமனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் மற்றவர்கள் அனைவரும் தூதை கிராமத்தில் வசித்து வருகிறார்கள். விலங்கு கருப்பனசாமி கோவில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.42/5 ல் உள்ளது.

2) சர்வே எண். 42/5ல் தாவா கோவில் உள்ளது என்பதைக் காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி சர்வே எண்ணுக்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை மேற்படி சர்வே எண்ணுக்கான வருவாய் ஆவணங்கள் கோவில் பெயரில் இல்லை எனது ஐயா பெயரில் உள்ளது. எனது ஐயா பெயர் என்னவென்றால் பிச்சைகுடும்பன் பாக்கியம் ஆகும். எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண். 42/5 ஆனது சர்கார் புறம்போக்கு விலங்கு கருப்பன் கோவில் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சமாதான கூட்டம் தொடர்பாக கொடுக்கப்பட்ட அறிவிப்பில் 7 வது நபராக என் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கூட்டத்திற்கு நான் போனேனா என்றால் நான் போகவில்லை. அந்த கூட்டத்தில் என்ன முடிவு எட்டப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான்

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.02.03 16:18:11 +0530

நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள புல எண். 42/4, 42/6 ஆகியவை எதற்காக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த சொத்தில் தான் கோவில் உள்ளது என்பதற்காக சொல்லியுள்ளேன்.

4) நாங்கள் தாவா கோவிலில் பரம்பரை பூசாரியாக இருந்து வருவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பூஜை பெட்டி மற்றும் பொங்கல் சாமான்கள் 2ம் பிரதிவாதி விலங்கன் வீட்டிற்கு அருகில் உள்ள கோவில் வீட்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு கோவில் பெயரில் பட்டா ஏற்படாமல் விலங்கன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி வகையறாக்கள் தாவா கோவிலில் பரம்பரையாக சாமியாடி வருபவர்கள் என்றால் சரிதான். தற்போது வாதிகளின் பெரைக்குறிப்பிட்டு சொன்னவுடன் சாட்சி வாதிகள் சாமியாடவில்லை என மாற்றி சொல்கிறார்.

5) 1ம் வாதி தனசேகரன் மற்றும் 2ம் வாதி கருப்புச்சாமி ஆகியோர்களின் வீடுகள் ஊரின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நத்தம் புல எண். 222/20 ல் வாதிகள் சாமியாடும் தளவாட சாமான்களை வைத்துள்ள விலங்கு கருப்பனசாமி கோவில் வீடு உள்ளது என்றால் சரியல்ல. நத்தம் புல எண். 222/20 க்கு அரசாங்கத்தால் விலங்கு கருப்பன கோவில் வீடு என பட்டா வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் வாதிகள் போட்டு வாங்கியிருப்பார்கள்.

6) நத்தம் சர்வே காலமான 1985 ம் ஆண்டு வாக்கிலேயே மேற்படி பட்டா புல எண். 222/20 க்கு வாதிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விலங்கன் வீட்டிற்கு அருகே உள்ள கோவில் வீட்டிற்கு கோவில் பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். பலி கொடுத்து வழிபடுவோம் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதில் எந்த மாதம் அவ்வாறு வழிபடுவோம் என்றால் மாசி களரிக்கு வழிபடுவோம்.

7) மாண்பமை உயர் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சாமி கும்பிடுவதை தடுத்ததால் சாமி கும்பிடுவதற்காக தாக்கல் செய்தோம். சாமி கும்பிடும்போது தடுத்தார்களா அல்லது சாமி கும்பிட ஏற்பாடு செய்யும்போது தடுத்தார்களா என்றால் சாமி கும்பிட ஏற்பாடு செய்தபோது வாதிகள் காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள். மேற்படி புகாரின் பேரில் நாங்கள் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜர் ஆனோமா என்றால் ஆஜரானோம்.

8) நாங்கள் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.4 மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவில் வட்டாட்சியர் விசாரணை செய்ய

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.03 16:18:18 +0530

உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவு சமாதான கூட்டத்திற்கு முன்னர் ஏற்பட்டதா அல்லது பின்னர் ஏற்பட்டதா என்றால் சமாதான கூட்டத்திற்கு முன்னர் ஏற்பட்டது. நான் மாண்பமை உயர்நீதிமன்றத்திற்கு வழக்கு தொடுப்பதற்கு செல்வதற்கு முன்பே கடந்த 03.06.2019 ம் தேதியில் நடைபெற்ற சமாதானக்கூட்டம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

9) அந்த கூட்டத்தில் பரம்பரையாக வாதிகள் சாமியாடுவதை அவர்கள் ஆடட்டும் என்றும் நாங்கள் பூஜை செய்வதை செய்யவேண்டியது என்றும் முடிவு எட்டப்பட்டது என்றால் தாசில்தார் சொன்னார் நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதே போல் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் உத்தரவிற்கு பின்னர் வட்டாட்சியர் இடத்தில் நடைபெற்ற சமாதான கூட்டத்திலும் நாங்கள் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். அந்தக் கூட்டத்திலும் வட்டாட்சியர் வாதிகள் சாமியாடட்டும், பிரதிவாதிகளாகிய நாங்கள் பூஜை செய்ய வேண்டியது என்று சொன்னார் என்றால் சரிதான் நாங்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை.

10) நாங்கள் மேற்படி வட்டாட்சியரின் உத்தரவை ஏற்காததால் சட்ட ஒழுங்கு சீர்குலையும் என்று எங்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி காவல் துறைக்கு வட்டாட்சியர் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் புகார் கொடுத்தார் என்றாலும் அதன் பேரில் திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் காவல் துறையினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் தூதை கிராமத்தில் ஒரு வாரம் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றாலும் சரியல்ல நாங்கள் சாமிகும்பிட கூடாது என்பதற்காக ஒரு நாள் மட்டும் காவல் துறையினர் தூதை கிராமத்தில் இருந்தனர்.

11) நாங்கள் பி.வா.சா.ஆ.5 பத்திரிக்கை போன்று கடந்த 40 வருடங்களாக பத்திரிக்கை அடித்து சாமி கும்பிடுவது வழக்கமா என்றால் 40 ஆண்டுகளாக அவ்வாறு பத்திரிக்கை அடித்து சாமி கும்பிடவில்லை. நாங்கள் மாண்பமை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டி பி.வா.சா.ஆ.5 பத்திரிக்கையை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நத்தம் புல எண். 222/20 ல் உள்ள கோவில் வீட்டிலிருந்து வாதிகள் பெட்டி மற்றும் கரக தளவாட சாமான்கள் எடுத்து வந்து வைகை ஆற்றில் வைத்து நீராடி கோவிலுக்கு சென்று பொங்கல் வைத்து சாமியாடி வருவது தொன்றுதொட்டு நடந்து வரும் மரபு என்றால் சரியல்ல.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.03 16:18:26 +0530

12) மாண்பமை உயர் நீதிமன்ற  உத்தரவின் படி நடைபெற்ற வட்டாட்சியர் சமாதான கூட்டத்தில் ஏற்பட்ட முடிவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.  வாதிகள் சாமி ஆடினார்கள் என்றாலும் நாங்கள் அதை தடை செய்தோம் என்றாலும் சரியல்ல. வட்டாட்சியர் தாவா கிராமத்தில் வந்து முறையாக விசாரணை செய்து சமாதான கூட்டத்தில் எடுத்த முடிவை நாங்கள் தான் மீறி சட்ட ஒழுங்கை குலைத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி சட்ட ஒழுங்கை குலைத்தோம் என்பதால் திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் இனிமேல் பிரச்சனை செய்யமாட்டோம் என எங்களிடம் எழுதி வாங்கினார்கள் என்றால் நான் போகவில்லை துாதையில் உள்ள என்னுடைய மற்ற பங்காளிகள் காவல் நிலையம் போனார்கள் ஆனால் கையொப்பம் எதுவும் செய்து கொடுக்கவில்லை.

13) நாங்கள் கையொப்பம் இடவில்லை என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல மேற்படி நாங்கள் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்திற்கு வரவழைத்து தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வாதிகளுக்கு சாமியாடும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.  நாங்கள் வட்டாட்சியர் கூட்டத்தில் நடைபெற்ற சமாதான முடிவை மீறியதால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.03 16:18:33 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam